திரு. ஏ. சி. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட விளம்பரம் செய்வதற்கான பேனர்களுக்கு அனுமதி பெற்றுக் கொண்டு, அனுமதி பெறாத இடங்களில், அனுமதி பெறாத பேனர்களை வைத்து விளம்பரப்படுத்துவதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா? அதைப் போக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அப்படி தகவல் இல்லை. ஆனாலும் கூட அங்கீகாரம் பெறாத விளம்பரங்களை யாராவது செய்திருந்தால், அவை அகற்ற படுவதற்கான நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

சென்னை அரசாங்க தோட்டத்திலுள்ள அரசுக் கட்டிடங்கள்

*வினா எண். 158.—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கைத்தறி கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சென்னை அரசாங்கத் தோட்டத்திலுள்ள தமிழக அரசுக்குச் சொந்தமான கட்டிடங்கள் மிக பழுதடைந்திருப்பது பற்றி அரசுக்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள் மூலம் தெரிவிக்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் (அ) அரசாங்கத் தோட்டத்திலுள்ள கட்டிடங்கள் பற்றி பொதுவான அறிக்கை ஏதும் பொதுப்பணித்துறை அதிகாரிகளால் அரசுக்கு அனுப்பப்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எல். இளையபெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத் தோட்டத்தில் இருக்கிற கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. குறிப்பாக அவைகள் கடந்த 10 வருட காலமாக வெள்ளையடிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. கேட்டால் பணம் இல்லை என்று காரணம் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு பிளாக்கிலும் 50 க்கும் மேற்பட்ட கட்டிடங்கள் இருக்கின்றன. அவைகளில் அதிகாரி களும் அரசியல்வாதிகளும் தங்கியிருக்கிறார்கள், சில கட்டிடங்கள் மிகவும் பழுதடைந்து மிகவும் ஒழுகுகிற நிலையிலே இருக்கின்றன. அவர்களைக் கேட்டால் 500

1981 செப்டம்பர் 1]

ரூபாய்தான் பண ஒதுக்கீடு செய்கிறார்கள் போதவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவைகளுக்குத் தனி முக்கியத்துவம் கொடுத்து உடனடியாக ரிப்பேர் செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, குறைகளைப் பொதுப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாகத் தகவல் தந்து இன்னின்ன கட்டிடங்கள் பழுதடைந்திருக்கின்றன என்று கேட்டவர்களுக்கெல்லாம் உடனடியாக ரிப்பேர் செய்து கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, பொதுப்படையாகச் சொல்லாமல் குறிப்பிட்டுச் சொன்னால், நடவடிக்கை எடுக்க வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, கோஷன்பிளாக், பேண்ட்மென்ஸ் குவார்ட்டர்ஸ் எல்லாம் மிகவும் பழுதடைந்து ரிப்பேராக இருப்பது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அதிகாரிகளுக்குத் தகவல் வந்திருக்கிறதா? உடனடியாக ரிப்பேர் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : தலைவர் அவர்களே, மொத்தம் எஸ்டேட்டில் 215 வீடுகள் இருக்கின்றன பிளாக் மட்டும் சொல்லிவிட்டால் போதாது. அதிலே குறிப்பிட்டு இந்த வீட்டிற்கு ரிப்பேர் செய்ய வேண்டியிருக்கிறது என்று தகவல் அளித்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத் தோட்டத்தில், ராஜாஜி ஹாலுக்குப் பக்கத்தில் உள்ள ஓல்ட்ஹாஸ்டல் மிகவும் பழுதான நிலைமையிலே இருக்கிறது. அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கூட மிகவும் ஆபத்தான நிலையிலேயே இருக்கிறார்கள். இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், பொதுப்பணித் துறைக்கு எந்தவிதமான புகாரும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கட்டிடம் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கிறது என்பதைப் பற்றி மனு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. அதை அரசு அறியுமா? அதைப்பற்றி ஏதாவது ஆவன செய்ய முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தை மனதில் கொண்டு ஆவன செய்யப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்கக்கூடிய ஹாஸ்டலின் மூன்றாவது கட்டிடம் மழை பெய்தால் எப்பொழுதும் நீர் ஒழுகி கீழே தண்ணீர் தேங்கக் கூடிய அளவில் இருக்கிறது. அந்தக் குறையை நீக்க அரசு உடனடியாக முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ் என் இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு தொடர்பு இல்லை என்றாலும் ஆவன செய்யப்படும்.

[முற்பகல் 9-40]

திரு. மு. அப்பாத்துரை : நம் அரசாங்க எஸ்டேட்டிலுள்ள அண்ணா சாலையிலிருந்து வரும் மெயின் கேட்டினை யாரோ உடைத்திருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? இரவு நேரத்தில் அது தூக்கியெறியப்பட்டிருக்கிறது. அதை உடனடியாக பழுது பார்க்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன் : என் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் கூறிய கூற்றுப் பிரகாரம் சரியான முறையில் பணம் ஒதுக்கப்பெறவில்லை என்பது ஒரு குற்றச்சாட்டாகும். இந்தப் பொதுப்பணித் துறையில் நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து இருந்த வந்த வழிமுறைகளை மாற்றியமைத்து இப்போது முன்பெல்லாம் பராமரிப்பதற்கான பண ஒதுக்கீடு செய்யும்போது பழைய கட்டிடம் கட்டிய காலத்தில் எந்தச் செலவில் கட்டினார்களோ அந்த தொகையை வைத்து பராமரிப்புக்கென நார்ம்ஸ் வைத்து ஒதுக்கினார்கள். இதனால் வெள்ளை அடிக்கக்கூடபணம்பற்றாக் குறையாக இருக்கிறது என்று பல முறையீடுகள் வந்ததால் சமீபத்தில் இதை மாற்றியமைத்து அரசால் ஒரு புதிய உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரம் பிளிந்த் ஏரியா நார்ம்ஸ் வைத்து அலாட் செய்யப்படுகிறது. ஆகவே இனிமேல் இப்படிப்பட்ட குறைபாடுகள் வராது.

பர்மா அகதிகளுக்கு வழங்கப்படும் மறுவாழ்வுக் கடன்கள்

*வினா எண். 159.—

திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில அரசு பர்மா தமிழர்களுக்கு அளித்து வந்த மறுவாழ்வுக் கடன்களை தள்ளுபடி செய்யும் செயற் குறிப்பு உள்ளதா?